30.10.14

தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

**<u>திருப்பத்தூரில் விவசாயிகள் குறை தீர்க்கும் முகாம்</u>**

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் வட்டார அளவிலான விவசாயிகள் குறை தீர்க்கும் முகாம் புதன்கிழமை நடைபெற்றது. திருப்பத்தூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் நடைபெற்ற குறை தீர்க்கும் முகாமுக்கு மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் கனேசன் தலைமை வகித்தார். வேளாண்மை அலுவலர் முத்து மீனாள் முன்னிலை வகித்தார். திருப்பத்தூர் வட்டாரப் பகுதியைச் சேர்ந்த சுமார் 50 விவசாயிகள் இம்முகாமில் கலந்து கொண்டனர். விவசாயிகளுக்குத் தேவையான விதை நெல் பி.பி.டி 5304 வேளாண்மை விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது என்றும் ரசாயன உரங்களான டி.ஏ.பி. யூரியா, பொட்டாஸ் ஆகியன கிராம கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகளுக்கு நியாயமான விலையில் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் கணேசன் தெரிவித்தார். மேலும் விவசாயிகளின் குறைகள் கேட்கப்பட்டு அவற்றை நிவர்த்தி செய்ய வழிவகை செய்யப்பட்டது. தொடர்ந்து நெல் பயிர் காப்பீடு செய்வதற்கான விண்ணப்பங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. விண்ணப்பத்தை கிராம நிர்வாக அலுவலரிடம் சான்று பெற்று வங்கிகளில் உரிய கட்டணம் செலுத்தி பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் விவசாயிகள் பங்குபெற கேட்டுக் கொள்ளப்பட்டது. மேலும் இம்முகாமில் தோட்டக் கலைத் துறை மற்றும் வேளான் விற்பனைத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டு துறை ரீதியான திட்டங்களை எடுத்துக் கூறினர். மேலும் இம் முகாமில் தோட்டக் கலை அலுவலர் காமாட்சி, வேளாண்மை உதவி அலுவலர்கள் இமாம் ஜாபர், ஜோதிராசு, சங்கீதா மற்றும் அட்மா, பணியாளர்கள் தங்கப் பாண்டியன், அலெக்ஸ்

பாண்டியன் ஜோதி ஆகியோர் கலந்து கொண்டனர். முகாம் முடிவில் துணை வேளாண்மை அலுவலர் பெ. ஸ்ரீதரன் நன்றி கூறினார்.

**செங்கத்தில் 35 மி.மீ மழை**

திருவண்ணாமலை மாவட்டத்தில் அதிகபட்சமாக செங்கத்தில் 35.40 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. இம்மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் செவ்வாய்க்கிழமை இரவு முதல் புதன்கிழமை காலை வரை லேசான மழை பெய்தது. இதில், அதிகபட்சமாக செங்கத்தில் 35.40 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது.

**இலவச கால்நடை மருத்துவ முகாம்**

சேலம் மாவட்டம், ஓமலூர் அருகேயுள்ள மோட்டூரில் திங்கள்கிழமை கால்நடைகளுக்கான இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. ஓமலூர் ரோட்டரி சங்கம், எஸ்.எஸ்.கே. பிரிக்ஸ் நிறுவனம் இணைந்து நடத்திய இந்த மருத்துவ முகாமிற்கு ரோட்டரி சங்கத் தலைவர் சரோஜா தலைமை வகித்தார். மண்டல உதவி ஆளுநர் ஆண்டியப்பன், ரோட்டரி சங்கச் செயலர் கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ரங்கநாதன், தினேஷ்குமார் ஆகியோர் முகாமை தொடக்கி வைத்தனர். மோட்டூர், வேலகவுண்டன்புதூர், பச்சனம்பட்டி, திண்டமங்கலம், கலர்காடு பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் தங்களது கால்நடைகளை அழைத்து வந்து பரிசோதனை செய்து கொண்டனர். முகாமில் கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம், கோமாரிநோய் உள்பட பல்வேறு நோய்களுக்கு தடுப்பூசி போடுதல், சினைப் பரிசோதனை, சுண்டுவாத அறுவைச் சிகிச்சை, கோழிகளுக்கு வெள்ளைக் கழிச்சல் நோய்த் தடுப்பூசி போடுதல் உள்ளிட்ட சிகிச்சைகள் அளிக்கப்பட்டன.

# தொடர் வருமானம் தரும் ஒருங்கிணைந்த பண்ணையம்



விவசாயத்துக்கான நிலப்பரப்பு நாளுக்கு நாள் குறுகிக் கொண்டே வருகிறது. எனவே விவசாய உற்பத்தியில் தன்னிறைவு அடையும் பொருட்டு முற்றிலும் ஒரு புதிய அணுகு முறை தேவைப்படுகிறது. இப்புதிய அணுகுமுறையே ஒருங்கிணைந்த பண்ணையமாகும். ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்து காட்டுப்பாக்கம் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் உதவிப் பேராசிரியர் (உழவியல்) பெ. முருகன் கூறியதாவது: பயிர் சாகுபடியை மட்டும் நம்பி இருக்காமல் கறவை மாடு வளர்ப்பு, மீன் வளர்ப்பு, கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, காடை வளர்ப்பு, காளான் வளர்ப்பு ஆகிய உபதொழில்களை இணைத்து விவசாயத்தில் ஈடுபட்டால் கூடுதல் வருமானம் பெறலாம்.

**ஒருங்கிணைந்த பண்ணையத்தின் முக்கியக் குறிக்கோள்கள்:**

பண்ணையத்தின் மொத்த வருமானத்தை அதிகரித்தல், ஆண்டு முழுவதும் தொடர்ந்து வருமானத்துக்கு வழி ஏற்படுத்துதல், விவசாயத் தொழிலாளர் களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு அளித்தல், பண்ணைப் பொருட்கள், பண்ணைக் கழிவுகளை சிறிய முறையில் சுழற்சி செய்தல், பண்ணை யிலிருந்து கிடைக்கும் கழிவுப் பொருள்களை மீண்டும் வயலில் இட்டு நிலத்தின் வளம், மகசூலைப் பெருக்குவதோடு, உரச் செலவுகளைக் குறைப்பதுபோன்றவை.

**ஒருங்கிணைந்த பண்ணையத்தின் அடிப்படைத் தத்துவங்கள்:**

ஒருங்கிணைந்த பண்ணை முறையில் பண்ணைத் திட்டம் வகுக்கும்போது நன்செய், தோட்டக்கால், புன்செய் நிலங்களுக்கு ஏற்ற

பயிர்த் திட்டத்தை அமைத்தல் வேண்டும். பின்பு அந்தப் பயிர்த் திட்டத்துக்கு ஏற்ப பொருளாதார ரீதியில் பலன் தரக்கூடிய ஒன்று அல்லது இரண்டு உபதொழில்களை தேர்ந்தெடுக்க வேண்டும். தேர்ந்து எடுக்கும் உபதொழில்கள் ஒன்றை ஒன்று சார்ந்து இருக்க வேண்டும். அவ்வாறு ஒருங்கிணைக்கப்பட்ட உப தொழில்களுக்குத் தேவையான இடுபொருள்கள் அந்தப் பண்ணையிலேயே உற்பத்தி செய்ய வேண்டும். உபதொழிலுக்கு ஏற்ற இடுபொருள்கள் போதவில்லையெனில் அதற்கேற்றவாறு பயிர்த் திட்டத்தை மாற்றியமைக்க வேண்டும். மேலும் ஒரு உப தொழிலிருந்து கிடைக்கும் கழிவுப் பொருள்களை மற்றொரு உபதொழிலுக்கு இடுபொருளாக இருக்குமாறு உபதொழில்களைத் தேர்ந்து எடுக்க வேண்டும். பண்ணையில் விளையும் அல்லது தங்கள் ஊரில் கிடைக்கும் தானியங்களைக் கொண்டே தீவனக் கலவை தயார் செய்தல் வேண்டும். அப்போது தான் உபதொழில்களுக்கு ஆகும் உற்பத்தி செலவு குறைந்து அதிக லாபம் பெறலாம். ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டத்தில் பயிர் சுழற்சியால் முதல் போகத்தில் நெல் பயிரிட்டு, இரண்டாம் போகத்தில் பயிறு, மூன்றாம் போகத்தில் பயிறு சாகுபடிக்கு மாற்றாக மக்காச்சோளம் ஆகியவற்றைப் பயிரிடலாம்.

**கோழி வளர்ப்பு:** ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டத்தில் மீன் வளர்ப்பு ஒரு அங்கமாக இருப்பதால் 10 சென்ட் மீன் குட்டைக்கும், மீதமுள்ள 90 சென்ட் பயிர் சாகுபடிக்கு ஒதுக்கலாம். இதில் இரண்டு போக நெல்லில் கிடைத்த பதர் நெல் தவிடு ஆக்கப்பட்டு கோழிக்குத் தீவனமாக பயன்படுத்தப்படலாம். இதே போல் மூன்றாம் போகத்தில் சேர்க்கப்பட்ட மாற்றுப் பயிரில் ஒன்றான மக்காச்சோளத்தையும் கோழித் தீவனத்துக்குத் தேவையான அளவு எடுத்துக் கொள்ளலாம். இவ்வாறு பயிர் சாகுபடியில் கிடைத்த சில விளைபொருள்கள், கழிவு உபயோகத்தால் கோழித் தீவனச் செலவை சுமார் 70 சதவீதம் குறைக்க முடியும்.

**மீன் குட்டையில் கோழி வளர்ப்பு:** கோழியின் கழிவு மீன்களுக்கு ஒரு சிறந்த உணவாகும். கோழியின் கழிவுகளில் 22 சதவீதம் புரதச் சத்தும், பாஸ்பரஸ், கந்தகம், தாமிரம், மாங்கனீசு போன்ற உலோகச் சத்துக்களும்

15 வகையான அமினோ அமிலங்களும் இருப்பதால் இது மீன் வளர்ச்சிக்கு உகந்ததாக உள்ளது. மீன்களின் எண்ணிக்கைக்குத் தக்கபடி கோழிகளின் எண்ணிக்கையை நிர்ணயிக்க வேண்டும். 400 கலப்பின மீன் குஞ்சுகளுக்கு 20 கோழிகள் போதுமானவையாகும். கோழிகளை 8-ஆவது வாரத்தில் விற்பனை செய்யலாம். மீன்கள் போதிய அளவிற்கு வளர்ச்சிப் பெற்று 6-வது மாதக் கடைசியில் விற்பனைக்குத் தயாராகும்.

**சிப்பிக்காளான் வளர்ப்பு:** நெற் பயிரிலிருந்து கிடைக்கும் வைக்கோல், மக்காச்சோளக் கதிர்ச்சக்கை காளான் வளர்ப்பிற்கு இடுபொருளாக உள்ளது. இதனால் குறைந்த செலவில் காளான் உற்பத்தி செய்து அதிக வருமானம் பெற வாய்ப்பு உள்ளது. ஆனால் உற்பத்தி செய்யும் காளான்களை அன்றன்றே விற்பனை செய்து விட வேண்டும்.

**கறவை மாடு வளர்ப்பு:** மக்காச்சோளத்திலிருந்து கிடைக்கும் மணிகள், தட்டு மூலமாகவும் பசுந்தீவனங்கள் மூலமாகவும் விவசாயிகள் 2 முதல் 3 கறவை மாடு வளர்த்து அதிலிருந்து கிடைக்கும் பால் மூலம் அதிக வருமானம்பெறலாம்.

**காடை வளர்ப்பு**: 100 சதுர அடி பரப்பளவு கொண்ட அறைக்கு 500 காடைக் குஞ்சுகள் என்ற அளவில் வளர்த்தால் மாதம் ரூ. 4,000 முதல் ரூ. 5,000 வரை வருமானம் பெறலாம்.

**நெல் வயலில் மீன் வளர்ப்பு:** வடகிழக்கு பருவமழை காலத்தில் நடுத்தர, அதிக வயதுடைய ரகங்களான வெள்ளைப் பொன்னி, பாப்பட்லா, ஆடுதுறை 49 ஆகியவை சாகுபடி செய்யப்படுகின்றன. ஒரு ஏக்கர் நெல் சாகுபடி செய்ய குறைந்தபட்சம் ரூ.10 ஆயிரம் முதல் 13 ஆயிரம் வரை செலவாகிறது. நெல் சாகுபடியை ஊக்குவிப்பதற்கும், நெல் சாகுபடி செய்யும் நிலங்களில் அதிக வருமானம் பெற நெல் வயலில் மீன் வளர்ப்பு உதவிகரமாக இருக்கும். இந்தத் தொழில்நுட்பத்தைக் கடைப்பிடிப்பதால் நெல் வயலில் உள்ள களைகளை கட்டுப்படுத்துவதுடன் பூச்சிகளின் தாக்குதலையும் குறைக்கலாம். மீன் கழிவுகள் வயலுக்கு உரமாகவும், 10

முதல் 15 சதவீதம் வரை கூடுதல் மகசூல் கிடைக்கவும் வாய்ப்பை ஏற்படுத்தும். வடகிழக்கு பருவமழை காலத்துக்குப் பின் சம்பா, தாளடி பருவத்தில் இந்த தொழில்நுட்பத்தைக் கடைப்பிடிக்கலாம். நெல்லுடன் மீன்வளர்ப்புக்கு வெள்ளைப் பொன்னி, பாப்பட்லா, ஆடுதுறை 49 ரகங்கள் மிகவும் ஏற்றவை. நெல் வயலின் வரப்பைச் சுற்றி 1 மீட்டர் ஆழமும், 1 மீட்டர் அகலமும் கொண்ட கால்வாய் அமைத்து அதில் மீன்களை வளர்க்கலாம். நெல் வயலில் கால்வாயை விட்டுவிட்டு மற்ற நடு பகுதியில் நெல்பயிர் நாற்றை வரிசைக்கு வரிசை 25 செ.மீ, செடிக்கு செடி 25 செ.மீ. இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். இவ்வாறு அதிக இடைவெளியில் நடவு செய்வதால் மீன்கள் வயலின் நடுபகுதிகளுக்கு சென்று இறைத் தேட வசதியாக இருக்கும். நெல் வயலில் நீர்விடும் பகுதி, நீர் வெளியேற்றம் பகுதியில் வலைகள் அமைத்து மீன்கள் தப்பிச் செல்வதைத் தடுக்க வேண்டும். நெற்பயிர் நடவு செய்தவுடன், நெல்வயலில் 5 செ.மீ. முதல் 10 செ.மீ. நீர் அளவு இருக்குமாறு பார்த்து கொள்ள வேண்டும். நெல் நடவு செய்யப்பட்டு 5 நாள்கள் கழித்து ஏக்கருக்கு 100 கிலோ அசோலாவை வயலில் இடவேண்டும். இவ்வாறு செய்வதால் நெற்பயிறுக்கு தழைச்சத்து கிடைப்பதுடன், அது மீன்களுக்கு நல்ல உணவாகவும் இருக்கும். நெல் நடவுக்குப் பின் 15 நாள்கள் கழித்து ரோகு, கட்லா, மிர்கால் போன்ற மீன் குஞ்சுகளை ஏக்கர் ஒன்றுக்கு 1,000 முதல் 1,200 வரை கால்வாயில் இருப்பு செய்யலாம். வாரம் ஒரு முறை மாட்டுச் சாணம், கிளைரிசிடியா தழைக் கட்டுகளை நெல் வயலில் உள்ள கால்வாயில் போட வேண்டும். இது மீன்களுக்கு சிறந்த உணவாகும். மேலும் வயலில் உள்ள அசோலா, களைகள், நெற்பயிறுக்கு தீங்கு விளைவிக்கும் பூச்சிகள் (விளக்கு பொறி வைப்பதால்) மீன்களுக்கு இறையாக கிடைக்கின்றன. நெல் வயலில் மீன்கள் வளர்க்கும்போது ரசாயன பூச்சிக் கொல்லிகள் தெளிக்க கூடாது. இயற்கை முறையில் கட்டுப்படுத்தும் மருந்துகளான வேப்ப எண்ணெய்,

பஞ்ச காவ்யா, இழைச்சாறு ஆகியவற்றை தெளிக்கலாம். நெல் முதிர்ச்சி பருவத்தில் நெற்பயிரின் நடுவே நீர் பாய்ச்சுவதை நிறுத்தி கொள்ள வேண்டும். இந்த சமயத்தில் கால்வாயில் மட்டுமே நீர் நிறுத்த வேண்டும். நெல் அறுவடை செய்தவுடன் கால்வாயில் உள்ள நீரை வடிகட்டி விட்டு மீன்களைப் பிடித்து விற்பனை செய்யலாம். நெல் வயலில் இருப்பு செய்யப்பட்ட மீன்கள் 5 மாதத்தில் 500 கிராம் முதல் 600 கிராம் வரை எடை கொண்டவையாக வளரும் வாய்ப்புள்ளது. இவ்வாறு செய்வதால் ஒரு ஏக்கருக்கு 400 கிலோ முதல் 500 கிலோ வரை மீன்களைப் பெறலாம். மேலும், விவரங்களுக்கு, காட்டுப்பாக்கம் வேளாண் அறிவியல் நிலையத்தை 044 - 2745237 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்றார் அவர்.

## பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் சேர அழைப்பு

மாவட்ட விவசாயிகள் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்ந்து பயன் பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. வேளாண் இணை இயக்குநர் தனசேகரன் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மாவட்டத்தில் சம்பா பருவத்துக்கு பயிர் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இயற்கை சீற்றம் அல்லது பூச்சி தாக்கி மகசூல் இழப்பு ஏற்பட்டால் இத் திட்டத்தின் கீழ் இழப்பீடு பெறலாம். தேசிய வேளாண்மை பயிர் காப்பீடுத் திட்டத்தில் கடன் பெற்ற, விவசாயிகள் ஏக்கருக்கு காப்பீடுத் தொகையாக ரூ.195-ம், கடன் பெறாத சிறு மற்றும் குறு விவசாயிகள் ரூ. 176 பிரிமியமாக செலுத்த வேண்டும். கடன் பெறாத விவசாயிகள் நவம்பர் 15ஆம் தேதிக்குள்ளும், கடன் பெற்ற விவசாயிகள் நவம்பர் 30ஆம் தேதி வரையிலும் காப்பீட்டிற்கான பிரிமியத்தை, தங்கள் கணக்கு வைத்துள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் செலுத்தலாம். இது தொடர்பாக மேலும் விவரம் வேண்டுவோர், தங்கள் பகுதி வேளாண் விரிவாக்க

அலுவலர், உதவி வேளாண் அலுவலரை தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம்.

## விவசாயத் திட்டத்துக்கு ரூ.3,875 கோடி ஒதுக்கீடு

2015-2016 நிதியாண்டில் வளம் சார்ந்த வங்கிக் கடன் திட்டத்தின் கீழ் விவசாயத்துக்கு ரூ.3,875 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2015-2016ஆம் நிதியாண்டிற்கு நபார்டு வங்கி தயாரித்த கடலூர் மாவட்ட வளம் சார்ந்த வங்கிக் கடன் திட்டத்தை மாவட்ட ஆட்சியர் எஸ்.சுரேஷ்குமார் புதன்கிழமை வெளியிட்டார். இத் திட்டத்தின் முதல் பிரதியை இந்தியன் வங்கியின் துணைப் பொது மேலாளர் கோவிந்தராஜன் பெற்றுக் கொண்டார். இத் திட்டத்தின் கீழ் 2015-2016ஆம் நிதியாண்டிற்கு ரூ.5,800 கோடி வங்கிக் கடன் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இது நடப்பாண்டைக் காட்டிலும் 11 சதவிகிதம் கூடுதலாகும். இத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியில் ரூ,3,875 கோடி விவசாயத் துறைக்கும், தொழில் துறைக்கு ரூ.221 கோடியும், இதர முன்னுரிமைக் கடன்களுக்கு ரூ.1,104 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இது தவிர நபார்டு வங்கியின் ஊரக கட்டுமான வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.380 கோடி மதிப்பீட்டில் 964 விரிவாக்கத் திட்டங்கள் மாவட்டம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என நபார்டு வங்கியின் மாவட்ட உதவிப் பொது மேலாளர் ராஜகோபாலன் தெரிவித்தார்.

## "வேளாண் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைக்க விவசாயிகள் முன்வரலாம்'

தூத்துக்குடியில் வேளாண் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைக்க விவசாயிகள் முன்வரலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து, மாவட்ட ஆட்சியர் ம. ரவிக்குமார் வெளியிட்ட செய்திக்குறிப்பு: மாவட்டத்தில் ரூ. 2.50 கோடி நிதியில் சிறிய மற்றும் பெரிய வேளாண் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைக்க அரசு உத்தரவிட்டுள்ளது. இத்

திட்டத்தில் பழங்கள், காய்கனிகள், தானியங்கள், இதர உணவுப் பொருள்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், மிளகாய் - ஒலியோரெசின், காளான், தென்னை, இதர வேளாண் மற்றும் தோட்டக்கலை பொருள்கள் தொடர்பான புதிய உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைக்கலாம். தேசிய உணவு பதப்படுத்தும் இயக்கம், மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி, சிறு விவசாயிகள் வேளாண் வணிக கட்டமைப்பு மூலம் துணிகர முதலீடு உதவி மற்றும் ஒருங்கிணைந்த வேளாண் சந்தைத் திட்டம் ஆகியத் திட்டங்களிலிருந்து நிதியுதவி பெறப்பட்டு தொழிற்சாலை அமைக்கலாம். தேசிய உணவு பதப்படுத்தும் திட்டத்தின்கீழ் 25 சதவீத மானியமும், அதிகபட்சமாக ரூ. 50 லட்சம் வரை மானியமும் பெறலாம். மேலும், இத்திட்டத்தில் கிராமப்புறங்களில் அமைக்கப்படும் ஆரம்பநிலை உணவு பதப்படுத்தும் நிலையம் மற்றும் சேகரிப்பு மையம் அமைக்க திட்ட மதிப்பீட்டில் 50 சதவீதம் மானியமும், அதிகபட்சமாக ரூ. 2.5 கோடி வரை மானியமாக பெறலாம். விருப்பமுள்ள தனி நபர்கள், கூட்டுறவுச் சங்கங்கள், வேளாண் உற்பத்தியாளர் நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், அரசு நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து தகுதி உடைய விண்ணப்பங்கள், துணை இயக்குநர், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை மூலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நவம்பர் முதல் வாரத்துக்குள் தாக்கல் செய்யவேண்டும் என செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய வேளாண் செய்திகள்

**100 அடியை நெருங்குகிறது மேட்டூர் அணை**

சேலம் : தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக மேட்டூர் அணையின் நீர்மட்டம் 100 அடியை நெருங்கி உள்ளது. கடந்த 3 நாட்களில் அணையின் நீர்மட்டம் 5 அடி உயர்ந்து 99.57 அடியை எட்டி உள்ளது. இன்று மாலைக்குள் இந்த ஆண்டில் 2வது முறையாக மேட்டூர் அணை 100 அடியை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. அணையின் நீர்இருப்பு 64.28 டி.எம்.சி., ஆக உள்ளது. அணையின் நீர்வரத்து 25,336 கனஅடியில் இருந்து 20,046 கனஅடியாக குறைந்துள்ளது. டெல்டா பாசன பகுதிகளில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால் கடந்த சில நாட்களாக மேட்டூர் அணையில் இருந்து நீர் வெளியேற்றப் படவில்லை.

**முட்டை விற்பனையில் மோசடியை தடுக்க அதிரடிவண்ண கலர் பூசி வியாபாரிகளுக்கு 'செக்'**



சேலம்: தமிழகத்தில் முட்டை விற்பனையில், வியாபாரிகள் மோசடியில் ஈடுபடுவதை தவிர்க்க, உற்பத்தியாளர்கள், மூன்று விதமான வண்ண கலர்களை முட்டையில் பூசி விற்பனைக்கு அனுப்ப துவங்கி உள்ளனர். உற்பத்தியாளர்களின் இந்த கிடுக்கிப்பிடியால், வியாபாரிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். தமிழகத்தில் நாள் ஒன்றுக்கு, 3.5 கோடி முட்டை

உற்பத்தி செய்யப்படுகின்றன. இதில், 80 லட்சம் முட்டை தமிழகத்தின் தேவைக்கும், 80 லட்சம் முட்டை கேரளாவுக்கும், 70 லட்சம் முட்டை வெளி நாடுகளுக்கும், 70 லட்சம் முட்டை சத்துணவுக்கும், 50 லட்சம் முட்டை இந்தியாவின் பிற மாநிலங்களுக்கும் விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன. **விலை நிர்ணயம்:** இதில், முட்டை விலையை, நாமக்கல் மண்டலத்தில், நாமக்கல்லை மையமாகக் கொண்டு செயல்படும், தேசிய முட்டை ஒருங்கிணைப்பு கமிட்டியே நிர்ணயம் செய்கிறது. இதே போல் பிற மண்டலங்களில் முட்டை விலை நிர்ணயம் செய்கின்றனர்.தினந்தோறும் உற்பத்தியாகும் முட்டை, அவற்றின் பயன்பாடு ஆகியவற்றை கணக்கில் கொண்டு, முட்டை விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. நாமக்கல்லில் முட்டை ஒன்று, 3.15 ரூபாய் நிர்ணயிக்கப்படும் நிலையில், வெளி மாவட்டம், மாநிலங்களின் போக்குவரத்து செலவை கணக்கிட்டு முட்டை விலையில், உயர்வு அரங்கேற்றப்படுகிறது.முட்டையின் அளவு, எடை ஆகியவற்றின் அடிப்படையில் மூன்று விதமாக தரம் பிரிக்கப்பட்டு, விற்பனை செய்யப்படுகிறது.பெரிய, நடுத்தரம், சிறிய என்ற அளவுகளில் முட்டை விற்பனைசெய்யப்படுகிறது.

**கொள்ளை லாபம் :**இதில், சிறிய முட்டையின் விலையை விட, நடுத்தர முட்டை, 30 காசு அதிகம், அதை விட பெரிய முட்டை, 40 காசு அதிகம் என்ற அடிப்படையில் உற்பத்தியாளர்கள், வியாபாரிகளுக்கு சப்ளை செய்கின்றனர்.நேற்றைய நிலையில், சிறிய முட்டை, 3.20 ரூபாய்க்கும், நடுத்தர முட்டை, 3.40 ரூபாய்க்கும், பெரிய முட்டை, 3.70 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது. ஆனால், வியாபாரிகள் லாபம் பெறும் நோக்கில், பெரிய முட்டைகளின் விலையில், சிறிய, நடுத்தர முட்டைகளை கலந்து விற்பனை செய்து, கொள்ளை லாபம் பெற்று வந்தனர். இதைத் தடுக்கும் வகையில், தற்போது உற்பத்தியாளர்கள், பச்சை, சிவப்பு, ரோஸ் ஆகிய நிறங்களில் குறியீடு செய்து, விற்பனைக்கு

அனுப்ப துவங்கி உள்ளனர். உற்பத்தியாளர்களின் இந்த குறியீட்டால், வியாபாரிகள் முட்டை விற்பனையில் தில்லுமுல்லு செயல்களில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.இதுவரை, முட்டை விற்பனையில் தில்லுமுல்லு செய்து, லாபம் சம்பாதித்து வந்த வியாபாரிகள், உற்பத்தியாளர்களின் நடவடிக்கையால் அதிர்ச்சி அடைந்து உள்ளனர். செவ்வாய்பேட்டையைச் சேர்ந்த முட்டை வியாபாரி சக்கரவர்த்தி கூறியதாவது: சத்துணவு முட்டைஉற்பத்தியாளர்களிடம் இருந்து பெறப்படும் முட்டைகளில், கடந்த மாதம் வரை, எவ்வித குறையீடும் இல்லை.ஆனால், சத்துணவுக்கு சப்ளை செய்யப்படும் முட்டை, வெளி மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு வந்து விடக்கூடாது என்பதற்காக, அதில் மட்டும், பச்சை நிறத்தில், 'அ' குறியீடு செய்து சப்ளை செய்வர். ஆனால், தற்போது, பெரிய முட்டைகளுக்கும், இரட்டை மஞ்சள் கருவை கொண்டுள்ள முட்டைகளுக்கும் கூடுதல் விலை நிர்ணயம் செய்யப்படுவதால், அந்த முட்டைகளை, பிற முட்டைகளில் இருந்து எளிதில் அடையாளம் காணும் வகையில், புதிதாக உற்பத்தியாளர்களே குறியீடு செய்து அனுப்புகின்றனர். இந்த குறியீடு காரணமாக, வியாபாரிகள் பொதுமக்களை ஏமாற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.இவ்வாறு, அவர் கூறினார்.

**<u>நெல் விதைகள் தரமானதா? பரிசோதனைக்கு அழைப்பு</u>**

திருவள்ளூர்: விவசாயிகள் தாங்கள் பயிரிடும் விதைகள் தரமானதா என்பதை, சோதனை மூலம் அறிந்து கொள்ளலாம் என, வேளாண் துறை அறிவித்து உள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில், தற்போது, வடகிழக்கு பருவமழை துவங்கி உள்ளதால், விவசாயிகள் நெற்பயிர் செய்து வருகின்றனர். தாங்கள் பயிரிடும் நெல் விதைகள் தரமானதா என்பதை அறிந்து, முளைப்புத்திறன் உள்ளவற்றை விதைத்தால், குறைந்த செலவில் அதிக லாபம் ஈட்டலாம். எனவே, விவசாயிகள், விதை உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள், தங்களிடம் உள்ள நெல் விதையின்

முளைப்புத் திறனை அறிய, 400 கிராம் அளவிற்கு, திருவள்ளூர் பெரியகுப்பத்தில் உள்ள, வேளாண் விதை பரிசோதனை ஆய்வகத்தில் அளிக்கலாம். கட்டணம் 30 ரூபாய். விதை மாதிரி சோதனை, 14 நாட்களில் கிடைக்கும், என, திருவள்ளூர் மாவட்ட வேளாண் விதை பரிசோதனை அலுவலர் ஞானசேகரன் தெரிவித்து உள்ளார்.

**வறண்டு கிடந்த கோமுகி ஆற்றில் கரைபுறண்டு ஓடும் நீரால் மகிழ்ச்சி**

கள்ளக்குறிச்சி: கடந்த இரண்டு ஆண்டுகளாக வறண்டு கிடந்த கோமுகி ஆற்றில் தண்ணீர் ஓடுவதால் விவசாயிகள், பொது மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கள்ளக்குறிச்சி பகுதியில் மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் கல்வராயன்மலை பகுதியில் பலத்த மழை பெய்தது. இதனால் நள்ளிரவு அணைக்கு வினாடிக்கு 350 கன அடி தொடர்ந்து நீர் வரத்து இருந்தது. கோமுகி அணையின் மொத்த கொள்ளளவான 46 அடியில் 44 அடிக்கு மட்டுமே இருப்பு வைக்க முடியும். அணையின் பாதுகாப்பு கருதி நேற்று முன்தினம் இரவு மெயின் ஷட்டர்கள் மூலம் ஆற்று வழியாக வரத்து நீர் முழுவதும் வெளியேற்றப் பட்டன. இதனால் கள்ளக்குறிச்சி கோமுகி ஆற்றில் தண்ணீர் ஓடுகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவ மழை பொய்த்து போனதால் கோமுகி ஆறு வறண்டு காணப்பட்டது. ஆற்றில் தற்போது தண்ணீர் பெருக்கெடுத்து ஓடு வதால் சுற்று வட்டார பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்துள்ளது. ஆற்றில் கரைபுறண்டு ஓடிடும் தண்ணீரால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

**சொட்டு நீர் பாசனம் விவசாயிகளுக்கு அறிவுரை**

ராசிபுரம் : "சொட்டு நீர் பாசன முறையை பயன்படுத்தும் விவசாயிகள், முறையாக பயன்படுத்த வேண்டும்' என, ராசிபுரம் தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் மோகன் விஜயகுமார் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: ராசிபுரம் தாலுகாவுக்கு உட்பட்ட,

சொட்டுநீர் பாசன முறை விவசாயிகள், நீர் பாய்ச்சுவதற்கு முன், டிஸ்க் வடிகட்டியை கொண்டு சுத்தம் செய்ய வேண்டும். மெயின் பைப், சப்மெயின் பைப், பக்கவாட்டு குழாய்களை, 15 நாட்களுக்கு ஒரு முறை சுத்தம் செய்ய வேண்டும். உபகரணத்தில் உள்ள வடிகட்டியின் இன்லெட் மற்றும் அவுட்லெட், சப்மெயின், பக்கவாட்டு குழாயின் இறுதியில் தேவையான அழுத்தம் உள்ளதா என பார்க்க வேண்டும்.உபகரணத்தை மண்ணின் ஈரப்பதம் மற்றும் பயிரின் நீர் தேவைக்கேற்ப இயக்க வேண்டும். உப்பு மற்றும் பாசனத்தினால், டிரிப்பரில் அடைப்பு ஏற்படாமல் இருக்க பார்த்துக் கொள்ள வேண்டும். நீண்ட நாட்கள் இயக்க தேவையில்லாத போதும் கூட உபகரணத்தை இயக்க வேண்டும். ஒவ்வொரு முறையும், உரம் மற்றும் அமில சிகிச்சை முடிந்து, 15 முதல், 30 நிமிடம் நீர் பாசனம் செய்ய வேண்டும்.தண்ணீரில் கரையக்கூடிய உரத்தை மட்டுமே பயன்படுத்த வேண்டும். மண்ணுக்கு அடியில் அமைக்கப்பட்ட சொட்டுநீர் பாசனமெனில், தினந்தோறும் குறிப்பிட்ட அழுத்தத்தில் இயக்க வேண்டும்.இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## நாமக்கல் மாவட்டத்தில் 240 மி.மீ., மழைப்பதிவு

நாமக்கல் : தொடர் மழையால், நீர்நிலைகளின் மட்டம் அதிகரித்து வரும் நிலையில், நாமக்கல் மாவட்டத்தில், நேற்று முன்தினம், 240.2 மில்லிமீட்டர் மழை பதிவாகியுள்ளது. நாமக்கல் மாவட்டத்தில், ஒரு வாரமாக விட்டு விட்டு மழை பெய்து வருவதால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. குளம், குட்டை, ஏரி, கிணறு, ஆழ்துளை கிணறு ஆகிய நீராதாரங்களில், நீர்மட்டம் அதிகரித்து வருகிறது. தொடர் மழையால், முழுமையாக விவசாய பணிகளில் ஈடுபட முடியாமல், விவசாயிகள் அவதியுற்று வருகின்றனர். நேற்று முன்தினம், காலை, 6 மணி முதல், நேற்று காலை, 6 மணி வரை, மாவட்டத்தில் பெய்த மழையளவு மில்லி மீட்டரில் வருமாறு: குமாரபாளையம், 35, மங்களபுரம், 24, மோகனூர், 28, நாமக்கல், 24, ப.வேலூர், 82, புதுச்சத்திரம், ஒன்று,

ராசிபுரம், 16.2, சேந்தமங்கலம் மற்றும் திருச்செங்கோடு தலா, 15 என, மொத்தமாக, 240.2 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது.

**<u>நிரம்பி வழியும் எண்ணமங்கலம் ஏரி</u>**

அந்தியூர் : அந்தியூர் அடுத்த எண்ணமங்கலத்தில் உள்ள ஏரி, கடந்த, மூன்று ஆண்டுகளாக தண்ணீர் இன்றி வற்றிக்கிடந்தது. இந்தாண்டு, வடகிழக்கு பருவமழையின் தீவிரத்தால், பர்கூர் கிழக்குமலை பகுதியில், கடந்த, 15 நாட்களாக பெய்த மழையால், வழுக்குபாறை பள்ளம் வழியாக, ஏரிக்கு தண்ணீர் வரத்துவங்கியது. நேற்று மதியம் நிலவரப்படி, ஏரி நிரம்பி வழிந்தோடுகிறது.இதனால், எண்ணமங்கலம் ஆலயங்கரடு, முத்தரசன்குட்டை, ராமகவுண்டன்கொட்டாய், செல்லம்பாளையம், மூலக்கடை உள்ளிட்ட பகுதியில் உள்ள கிணறுகளின் நீர் மட்டம் உயர்ந்து, 300க்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பளவு நிலம் பயனடையும், என விவசாயிகள் கூறுகின்றனர்.

**<u>முருங்கை சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்</u>**

தேனி : வாழை,முருங்கை சாகுபடி செய்வதில் தேனி விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். மாவட்டத்தில் தென்னை, கரும்பு, நெல், பருத்தி சாகுபடி செய்த விவசாயிகள் பலரும் தற்போது வாழை,முருங்கை சாகுபடிக்கு மாறி வருகின்றனர்.வாழையில் தற்போது கண்டறியப் பட்டுள்ள திசுவாழை என்ற உயர்ரகத்தில் விளைச்சல் அதிகம் கிடைக்கிறது. வாழைப்பழத்திற்கு விலையும் நன்றாக கிடைக்கிறது. சேமித்து வைக்கவும், சீராக பழுக்க வைக்கவும் தொழில்நுட்பத்துடன் கூடிய உள் கட்டமைப்பு வசதிகள் பெருகி உள்ளன.எனவேஅதிக எண்ணிக்கையில் விவசாயிகள் வாழை சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். மாவட்டம் முழுவதும் பரவலாக எல்லா பகுதிகளிலும் வாழை சாகுபடி அதிகரித்துள்ளது. அடுத்து வறட்சிஅதிகம் உள்ள பகுதிகளில் முருங்கை சாகுபடி நடக்கிறது. குறைந்த அளவு நீர் ஆதாரம் உள்ள பகுதிகளில் விளைவதாலும், குறைவான பராமரிப்பு செலவு காரணமாகவும்,நல்ல

விலை கிடைப்பதாலும் விவசாயிகள் முருங்கை சாகுபடியில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

**<u>குதிரைவாலி சாகுபடி</u>**

ஆர்.எஸ்.மங்கலம் : விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு 4 கிலோ குதிரைவாலி விதைப்பு செய்து, ரூ.15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் வரை லாபம் பெறலாம். எனவே, ஆர்.எஸ்.மங்கலம் சுற்றுப்பகுதிகளில் உள்ள விவசாயிகள் கோ-2 ரக குதிரைவாலி விதைகளை ஆர்.எஸ்.மங்கலம் வேளாண்மை விரிவாக்க மையத்தில் வாங்கி பயனடையுமாறு வேளாண்மை உதவி இயக்குனர் ராஜாராம் தெரிவித்துள்ளார்.

**<u>ராஜபாளையத்தில் 115 மி.மீ.,மழை</u>**

விருதுநகர் : விருதுநகர்மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக வடகிழக்கு பருவமழை பெய்துவருகிறது. நேற்றுகாலை 8.30 மணிப்படி(மி.மீ.,) சிவகாசியில் 2.6, சாத்தூரில் 3, ஸ்ரீவி.,யில் 14, பிளவக்கல்லில் 28, அதிகபட்சமாக ராஜபாளையத்தில் 115 பதிவாகியுள்ளது. 14 மீட்டர் உயரம் கொண்ட பிளவக்கல் அணையில் 11.70, 13 மீ., உயரம் கொண்ட கோவிலாங்குளம் அணையில் 7.85 , 7.50 மீட்டர் உயரம் கொண்ட ஆனைக்குட்டம் அணையில் 2.23 அடி நீர் இருப்பு உள்ளது.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

**<u>விதைப் பண்ணை அமைக்க உதவி இயக்குனர் வேண்டுகோள்</u>**

கிருஷ்ணகிரி, : கிருஷ்ணகிரி மாவட்டத்தில் விதைப் பண்ணை அமைக்க விதைச்சான்று உதவி இயக்குனர் வேண்டுகோள் விடுத்துள்ளார். கிருஷ்ணகிரி விதைச்சான்று உதவி இயக்குநர் சண்முகம் ஓசூர் அருகே

உள்ள சித்தனப்பள்ளி கிராமத்தை சேர்ந்த கிருஷ்ணாரெட்டி என்பவரது துவரை தோட்டத்தை ஆய்வு செய்தார். அப்போது அவர் கூறியதாவது: வடகிழக்கு பருவ மழை நன்கு பெய்து வருகிறது. இதனால் விவசாயிகள் ரபி பருவத்திற்கான பயிர்கள் விதைப்பு மேற் கொண்டு விதைப்பண்ணை பதிவு செய் யலாம். ஏக்கர் ஒன்றுக்கு வயல் ஆய்வுக்கட்டணம் ரூ. 50ம், பதிவு கட்டணம் ரூ. 25ம், விதை பரிசோதனை கட்ட ணம் ரூ.30ம் பணம் செலுத்தி விதைச்சான்று உதவி இயக்குனர் அலுவலகத்தில் பதிவு செய்து, தரமான விதைகளை உற் பத்தி செய்து தகுதியான ரகங்களுக்கு அரசு மானி யமும் பெறலாம். மாவட்டத்தில் துவரை பயிர்கள் தற்போது பூக்கும் தருணத்தில் இருப்பதால் 2 சதவீதம் டிஏபி கரைசல் தெளித்து தரமான விதை களை உற்பத்தி செய்யலாம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## புலிவலம் பகுதியில் 40 மிமீ மழை பதிவு

திருச்சி: திருச்சி மாவட்டம் புலிவலம் பகுதியில் நேற்று 40 மி.மீ மழை பதிவானது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் வடகிழக்கு பருவமழை பெய்து வருகி றது. டெல்டா பகுதியில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால் குளம், ஏரிகளில் நீர் நிரம்பி வருகிறது. இத னால் விவசாய பணிகள் மும்மரமாக நடந்து வருகி றது. இந்நிலையில் திருச்சி மாவட்டத்தில் நேற்று காலை 8 மணி நிலவரப் படி முசிறி, பொன்னி யாறு அணை, கோவில் பட்டி, மேலணை உள் ளிட்ட பகுதிகளில் போதிய மழை பெய்யவில்லை. இதில் அதிக பட்சமாக புலிவலம் பகுதியில் 40 மி.மீ மழை பெய்தது. ஜங்ஷன், பொன் மலை பகுதியில் குறைந்த பட்சமாக 1.20 மி.மீ மழை பதிவானது. திருச்சி மாவட்டத்தில் நேற்று காலை 8மணி வரையிலான 24மணி நேரத்தில் பெய்த மழை அளவு(மி.மீ): லால்குடி 9.30, மணப் பாறை 20.60, துறையூர் 12, புள்ளம்பாடி 28.20, தா. பேட்டை 20.50, திருச்சி ஏர்போர்ட் 5.20, திருச்சி டவுன் 2.40, மருங்காபுரி 4.20, நவலூர்குட்டப்பட்டு 2, நந்தியார் தலைப்பு 15, கல்லக்குடி 11.20, வாத் தலை அணைக்கட்டு 3.20, சமயபுரம் 2, தேவிமங்கலம் 5.80, சிறுகுடி

24, புலிவலம் 40, குப்பம்பட்டி 8, கோவில்பட்டி பொன் மலை 00.20, திருச்சி ஜங் சன் 00.20, துவாக்குடி 27, மொத்தம் 248 மி.மீ மழை பெய்துள்ளது. சராசரி யாக 9.92 மிமீ பதிவாகியுள்ளது.

**<u>உயர் விளைச்சலுக்கு சான்று விதைகள் விவசாயிகளுக்கு அழைப்பு</u>**

திருச்சி: உயர் விளைச்சலுக்கு சான்று விதைகள் உதவுதால் விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. விதையே விவசாயத்தின் தொடக்கமாகும். நல்ல தரமான விதைகளின் மூலமே மற்ற இடுபொருட்க ளான உரம் மற்றும் நீர் ஆகியவற்றின் முழுமை யான பலனை நாம் பெற முடியும். நல்ல தரமான விதைகளை அனைத்து விவசாயிகளுக்கும் கிடைக்க செய்யும் நோக்கத்துடன் விதை சட்டம் 1966 பிரிவு (8)ன் கீழ் விதை சான்றுத் துறை 1979ம் ஆண்டு கோவையில் தொடங்கப்பட்டது. சான்று பெற்ற விதை களை பயன்படுத்துவதால் நல்ல முளைப்பு திறன், சீரான வளர்ச்சி, அதிக மகசூல், ஒரே நேரத்தில் அறுவடை ஆகிய பயன்களை பெறலாம். விதை நிலைகளான வல்லுனர் விதை, ஆதார நிலை விதை மற்றும் சான்று நிலை விதைகளை நாம் தெரிந்து கொள்வது அவசியமாகும். விதை நிலைகளில் முதலாவதான வல்லுனர் விதை யின் உற்பத்தி விஞ்ஞானிகளின் மேற்பார்வையில் நடைபெறும். மஞ்சள் நிறை அட்டைகள் கொண்ட இதன் இனத்துாய்மை 100 சதவீதமாகும். இதுகுறித்து திருச்சி விதை சான்று உதவி இயக்குனர் எழில்அரசு, அலு வலர் கவிதா ஆகியோர் கூறுகையில், வல்லுனர் விதையின் தொடர்ச்சியாக உற்பத்தி செய்யப்படுவது ஆதார நிலை விதையாகும். இதில் வெள்ளை நிறை அட்டைகள் பயன்படுத்துகின்றனர். ஆதார நிலையில் இருந்து உற்பத்தி செய்யப்படும் சான்று நிலை விதைகளின் இனத்தூய்மை 98சதவீதமாகும். இதில் ஊதாநிற அட்டைகள் உபயோகிக்கப்படும். தற்போது சான்று விதைகளை தேசிய விதை கழகங்கள், மாநில அரசு விதைப் பண்ணைகள், வேளாண் துறைகள், கூட் டுறவு அமைப்புகள், தனி யார் நிறுவனங்கள்

மற்றும் விவசாயிகள் உற்பத்தி செய்கின்றனர். சான்று பெற்ற விதைகளை தற்போது விவசாயிகள் அதிகமாக வாங்கி பயன்படுத்துகின்றனர். எனவே உணவு உற்பத் தியை பெருக்கிட தரமான சான்று விதை உற்பத்தியி லும் விவசாயிகள் தங்களை ஈடுபடுத்தி கொள்ள வேண் டும் என தெரிவித்தனர்.

## வடகிழக்கு பருவமழை துவங்கிய பின்பு மாவட்டத்தில் 247 மி.மீ பதிவு

சேலம், : சேலம் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை காலம் துவங்கியதையடுத்து முதல் முறையாக 247மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது. தமிழகத்தில் வடகிழக்கு பருவமழைக் காலம் கடந்த 20ம்தேதி துவங்கியது. இதையடுத்து சேலம் மாவட்டம் முழுவதும் பரவலான மழை பெய்து வருகிறது. இந்த மழையானது நேற்று முன்தினம் இரவும் நீடித்தது. இதில் மழைக்காலம் துவங்கியதையடுத்து எப்போதும் இல்லாத வகையில் அதிகளவு மழை பதிவாகியுள்ளது. சேலம் மாநகரப் பகுதிகளில் 8.7மில்லிமீட்டர், ஏற்காட்டில் 6.6மில்லிமீட் டர், ஆத்தூரில் 23.4மில்லி மீட்டர், வாழப்பாடியில் 31மில்லிமீட்டர், தம்மம்பட்டியில் 25.2மில்லி மீட்டர், கெங்கவல்லியில் 7.4மில்லி மீட்டர், ஓமலூரில் 22.2மில்லி மீட்டர், சங்ககிரியில் 9.0மில்லி மீட்டர், இடைப்பாடியில் 11.4மில்லி மீட்டர், மேட்டூரில் 32.4மில்லி மீட்டர், வீரகனூரில் 73.2மில்லி மீட்டர் என்ற அளவில் மழை பதிவாகியுள்ளது. மாவட்டம் முழுவதும் 247.35மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. வடகிழக்கு பருவமழைக் காலம் துவங்கியதையடுத்து அதிகபட்சமாக இதுவரை 120 மில்லி மீட்டருக்கு மேல் மழை பெய்யவில்லை. இந்நிலையில் முதல்முறையாக நேற்று முன்தினம் இரவு 247மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது விவசாயிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. பலத்தமழை காரண மாக மாவட்டத்தில் உள்ள அனைத்து நீர்நிலைகளிலும் நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதே போல் ஒரு சில பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டமும் உயர்ந்துள்ளதாக விவசாயிகள்தெரிவித்தனர்.

## காட்டம்பட்டி கிராமத்தில் விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்ப பயிற்சி

தர்மபுரி, : தேசிய வேளாண்மை விரிவாக்க மற்றும் தொழில்நுட்ப இய க்கத்தின் கீழ் வேளாண்மை விரிவாக்க துணை இயக்கத்தின் சார்பில் தர்மபுரி வட்டாரத்தில் காட்டம்பட்டி கிராமத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியில் வேளா ண்மை துறை, கால்நடைத்துறை, பட்டுவளர்ச்சி துறை, வேளாண் வணிகம், விற்பனை துறை, பொறி யியல் துறை, தோட்டக்கலை துறை ஆகிய துறைகளின் தொழில்நுட்ப வல்லுனர்கள் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு மண் பரிசோதனை செயல் விளக்கம் அளித்தனர். நுண்ணுயிர் விதை நேர்த்தி, ஒருங்கிணைந்த பூச்சி நோய் கட்டுப்பாடு, உர நிர் வாகம், பண்ணைக் குட்டை அமைப்பது மற்றும் அதன் பயன்கள், கால்நடையை தாக்கும் நோய்கள் கட்டுப்பாடு லாபகரமான கால்நடை வளர்ப்பு உத்திகள் நவீன பட்டுவளர்ப்பு முறைகள், வேளாண் விளை பொருட்கள் லாபகரமாக விற்பனை செய்வதற்கான உத்திகள், வேளா ண்மையில் நவீன இயந்திரத்தின் பயன்பாடு, தோட்டக்கலை பயிர்கள் நவீன சாகுபடி முறைகள், தமிழக அரசின் மானிய திட்டங்கள் ஆகியன குறித்து விளக்கி கூறப்பட்டது. பயிற்சியில் உழவர் பயி ற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குனர் பா ஸ்கர் தலைமை வகித்தார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை தர்மபுரி வட்டார வேளாண் விரிவாக்க துணை இயக்க பளப்பணியாளர்கள், வட்டார தொழில்நுட்ப மேலாளர், உதவி தொழில்நுட்பமேலாளர்கள்செய்திருந்தனர்.

## திருவாரூரில் இன்று விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருவாரூர்: திருவாரூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் இன்று (30ம் தேதி) காலை 10.30 மணியளவில் நடைபெற உள்ளது. இதனால் மாவட்டத்தில் உள்ள

விவசாயிகளும், விவசாய சங்க பிரதிநிதிகளும் தவறாமல் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கலெக்டர் மதிவாணன் தெரிவித்துள்ளார்.

**<u>சண்முகாநதி அணை??நிரம்பியது</u>**

உத்தமபாளையம், : உத்தமபாளையம் அருகே ராயப்பன்பட்டியில் சண்முகாநதி அணை உள்ளது. மொத்தம் 52.5 அடியை கொண்ட இந்த அணை ஹைவேவிஸ் மலைப்பகுதியில் கொட்டும் கனமழை காரணமாக நிரம்பி உள்ளது.இதனால் ராயப்பன்பட்டி, ஆனைமலையன்பட்டி, அணைப்பட்டி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மழையின் காரணமாக அணை நிரம்பியதால் மறுகால் பாய்கிறது. இதனையடுத்து ஓடைப்பட்டி, சீப்பாலக்கோட்டை, தென்பழனி உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த விவசாய நிலங்கள் மறைமுகமாக பயன்பெறும் வகையில் அணையில் இருந்து 3 மாதத்திற்கு தண்ணீர் திறப்பது வழக்கம். அணை நிறைந்து 4 நாட்களாகி விட்டதால் பொதுப்பணித்துறை அதிகாரிகள் சண்முகாநதி அணையில் இருந்து தண்ணீரை திறக்க தமிழக அரசிற்கு பரிந்துரை செய்துள்ளனர். இதுகுறித்து அதிகாரிகள் கூறுகையில், ‘அணை யின் நீர்மட்டம் 52.5 அடியை எட்டி உள்ளதால் விவசாயத்திற்காக இன்னும் ஓரிரு நாட்களில் தண்ணீர் திறக்கப்படும். இதற்காக அரசிற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது’ என்றனர்.

**<u>கம்பம் பகுதியில் இன்று முதல் நெல் நேரடி கொள்முதல்</u>**

தேனி, : உத்தமபாளையம், சின்னமனூர், கம்பம் பகுதியில் நேரடி நெல் கொள்முதல் இன்று முதல் செய்யப்பட உள்ளதாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் தெரிவித்துள்ளது. தேனி மாவட்டத்தில் கம்பம், உத்தமபாளையம், சின்னமனூர் உள்ளிட்ட பகுதிகளில் தற்போது கரீப் பருவ நெல் அறுவடை தொடங்கி உள்ளது. இப்பகுதிகளில் உள்ள விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்முதல் செய்து கொள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் சார்பில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் இன்று முதல் அமைக்கப்பட்டுள்ளன. இதன்படி கம்பத்தில்

மார்க்கெட்டிங் சொசைட்டியிலும், உத்தமபாளையத்தில் பி.டி.ஆர் பண்ணையிலும், சின்னமனூரில் மார்க்கெட்டிங் சொசைட்டியிலும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் அமைத்துள்ளது. கம்பம், உத்தமபாளையம் மற்றும் சின்னமனூர் சுற்றுவட்டார விவசாயிகள் அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் தங்களது நெல்லை விற்பனை செய்யலாம். இதில் 2014-15 கரீப் பருவத்தில் உற்பத்தி செய்யப்பட்ட சன்ன ரகம் நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1470க்கும், பொது ரகம் நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1410க்கும் கொள்முதல் செய்யப்படுகிறது. மேலும் விவசாயிகள் தங்களுக்குரிய நெல் மூட்டைகளை அதிகபட்சம் 17 சதவீத அளவு ஈரப்பத்திற்குள் இருக்குமாறு உலரவைத்து கொண்டு வர வேண்டும். நெல் வியாபாரிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்படமாட்டாது. விவசாயிகள் தங்கள் நிலங்களில் விளைந்த நெல்லை கொண்டு வரும்போது, சிட்டா, அடங்கல் நகல், குடும்ப அட்டைநகல் மற்றும் வங்கி கணக்கு புத்தகம் ஒன்று ஜெராக்ஸ் எடுத்து வரவேண்டும். நேரடி நெல் கொள்முதல் செய்த பின்னர், அதற்கான தொகையை விவசாயிகளுக்கு அவர்களது வங்கிக்கணக்கில் இ.சி.எஸ் மூலம் பணம் பட்டுவாடா செய்யப்படும் என தேனி மாவட்ட கலெக்டர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

## <u>மகசூலை பெருக்க பருத்தியை தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்த வழிமுறைகள்: வேளாண் அதிகாரிகள் ஆலோசனை</u>

திருச்சுழி: திருச்சுழி பகுதியில் பருத்தியை தாக்கும் சாறு உறிஞ்சும் பூச்சி களை கட்டுப்படுத்த விவசாயிகளுக்கு வேளா ண்மை அறிவியல் நிலைய அதிகாரிகள் ஆலோசனை வழங்கி உள்ளனர். திருச்சுழி, நரிக்குடி ஆகிய பகுதிகளில் விவசாயிகள் ஏராளமான ஏக்கரில் பருத்தி சாகுபடி செய்துள்ளனர். தற்போது பயிர் 20 முதல் 25 நாள் பயிராக உள்ள நிலையில், இப்பருவத்தில் சாறு உறிஞ்சும் பூச்சிகளான தத்துப்பூச்சி, இலைப்பேன், அசுவினி மற்றும் வெள்ளை ஈயின் தாக்குதல் அதிகரிக்க

வாய்ப்பு உள்ளன. இப்பூச்சிகளின் தாக்குதலினால் செடிகள் மஞ்சள் நிறமடைந்து பயிர் வளர்ச்சி குன்றி காணப்படும். எனவே தாக்குதல் அதிகமிருந்தால் செடிகள் வாடி கருகிவிடும் நிலை ஏற்படும். இது சம்பந்தமாக கோவிலாங்குளம் வே ளாண்மை அறிவி யல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் மு னைவர் பால்பாண்டி மற் றும் பயிர்பாதுகாப்பு துறை தொழில்நுட்ப வல்லுநர் ராஜேந்திரன் பூச்சிகளை கட்டுப்படுத்த ஆலோசனை வழங்கியுள்ளனர். அதன்படி, பருத்தி விதைகளை ஊடுருவி பாயும் பூச்சி கொல்லியான இமிடாகுளோபிரிட் மருந்தினை 1 கிலோ விதைக்கு 5 மி.லி. என்ற அளவில் கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். பயிர் முளைத்த 20 முதல் 25 நாளில் இமிடாகுளோபிரிட் மருந்து ஏக்கருக்கு 40 மிலி என்ற அளவிலும் அல்லது ரோகார் மருந்து ஏக்கருக்கு 300 மிலி என்ற அளவிலும் பயிரில் தெளிக்க வேண்டும். குருணை மருந்துகளான பியூரடான் அல்லது போரேட் மருந்துகளை ஏக்கருக்கு 5 கிலோ என்ற அளவில் 3 பங்கு மணலுடன் கலந்து மண்ணில் இடவேண்டும். தாவர பூச்சிக் கொல்லிகளான வேப்ப எண்ணெய் 3 சதம் அல்லது வேப்பங்கொட்டை சாறு 5 சதம் என்ற அளவிலும் பயிரில் தெளிக்க வேண்டும். ஊடு பயிராக தட்டைப் பயறு, சூரியகாந்தி மற்றும் மக்காச்சோளம் பயிரிட் டால் நன்மை செய்யும் பூச்சியான பொறி வண்டின் எண்ணிக்கை பெருகி அசுவினி, தத்துப்பூச்சி மற்றும் இலைப்பேனின் தாக்குதலைக் குறைக்கிறது. மஞ்சள் வண்ண ஒட்டும் பொறி ஏக்கருக்கு 10 என்ற அளவில் வைத்து வெள்ளை ஈயின் தாக்குதலைக் குறைக்கலாம் என கூறியுள்ளார்.

## <u>தண்ணீர் வரத்து அதிகரிப்பு ராமநத்தம் அணை திறப்பு</u>

திட்டக்குடி: திட்டக்குடி மற்றும் பெரம்பலூர் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் இரவு பலத்த மழை பெய்தது. இதனால் பெரம்பலூர் பகுதி ஓடைகளில் இருந்து பெருக்கெடுத்து ஓடிய மழைநீர் வெள்ளாற்றை அடைந்தது. இதையடுத்து பொதுப்பணித்துறையினர் ராமநத்தம் அணைக்கட்டில் இருந்து வெலிங்டன் ஏரிக்கு 1860 கன அடி தண்ணீரை

திறந்து விட்டனர். மேலும் நீர்வரத்து 6800 கன அடியை நெருங்கி உள்ளதால் உபரிநீரை அணைக்கட்டில் இருந்து விநாடிக்கு 2774 கன அடி நீரை திறந்து விட்டுள்ளனர்.வெள்ளாற்றில் நீர்வரத்து அதிகரித்ததால் விருத்தாசலம் பொதுப் பணித்துறைகோட்டப்பொறியாளர் பெரியசாமி, உதவி கோட்டப்பொறியாளர் மாணிக்கம், உதவி பொறி யாளர் பாஸ்கர், திடடக்குடி தாசில்தார் தேவநாதன், மண்டல துணை தாசில்தார் செந்தில்குமார், வருவாய் ஆய்வாளர்கள் எழில்வளவன், ஜெயசீலன், பாசன ஆய்வாளர்கள் கலியமூர்த்தி, முருகன் ஆகியோர் ராமநத்தம் அணைக்கட்டில் முகாமிட்டு கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.திட்டக்குடி பகுதியில் பெய்த கனமழையால் ஆதர்மட்டம் ஓடையில் இருந்து 2 ஆயிரம் கன அடி தண்ணீர் வெலிங்டன் நீர்தேக்கத்திற்கு வந்து கொண்டிருக்கிறது. இந்த அணையின் மொத்த கொள்ளளவு 30 அடி. இதில் 13 அடிக்கு நீர் நிரம்பி உள்ளது.

## <u>சாம்பல், போரான் சத்துக்குறைவால் தென்னையில் குரும்பை உதிர்வதை தடுக்க வழிமுறை வேளாண் உதவி இயக்குனர் விளக்கம்</u>

சேதுபாவாசத்திரம்: தென்னையில் காணப்படும் சாம்பல் சத்து மற்றும் போரான் சத்து பற்றாக்குறையை போக்கும் வழிமுறைகள் பற்றி சேதுபாவாசத்திர வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பெரியசாமி விளக்கமளித்துள்ளார். அவர்கள் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் தென்னைக்கு மற்ற சத்துக்களை விட சாம்பல் சத்துதான் மிக அதிகமாக தேவைப்படுகிறது. இந்த சத்து குறைந்தால் தேங்காய் அளவு சிறுத்து, எண்ணிக்கையும் குறைந்து விடும். மேல்இலைகள் பசுமையாக இருந்தாலும் அடி இலைகளில் வெளிர்பச்சை நிற புள்ளிகள் தோன்றி மஞ்சள் நிறமடைந்து பின்னர் பழுப்பு நிறமடையும். இலைகள் கீழ்நோக்கி தொங்க தொடங்கும். முதிர்ச்சி அடையும் முன்பே இலைகள் உதிர்ந்து விடும். 5 வருடங்களுக்கு மேல் வயதுடைய தென்னைமரத்திற்கு ஒரு வருடத்திற்கு 50 கிலோ நன்கு மக்கிய தொழுஉரத்துடன் யூரியா 1.300

கிலோ, சூப்பர் பாஸ்பேட் 2 கிலோ, பொட்டாஷ் 3.500 கிலோ உரங்களை கலந்து மரத்தடியில் இருந்து 5 அடி தள்ளி வட்டமாக உரமிட்டு மண்வெட்டியால் உரத்தை மண்ணுடன் கலந்து பிறகு நீர்பாய்ச்ச வேண்டும். உரத்தினை இரண்டாக பிரித்து ஜூன், ஜூலை மாதத்திலும், டிசம்பர், ஜனவரி மாதத்திலும் இரண்டு முறையாக பிரித்து இட வேண்டும். பொட்டாஷ் உரம் 2 கிலோவிற்கு பதிலாக 3.500 கிலோ இடுவதினால் தென்னையை தாக்கும் ஈரியோபைட் சிலந்தி கட்டுப் படுத்தப் படுகிறது. போரான்சத்து பற்றாக்குறை ஏற்பட்டால் இளம் கன்றுகளில் இலை பிரியாமல் இருக்கும். குருத்து இலைகள் வளர்ச்சி குன்றி இலைகள் பிரியாமல் இருக்கும். பாளையிலேயே குரும்பைகள் காய்ந்து கறுப்பாக காணப்படும். குரும்பைகள் அதிகமாக கீழே உதிரும். வெற்றுத் தேங்காய்கள் மற்றும் ஒல்லிக்காய்கள் தோன்றும். இக்குறை களை போக்கிட நன்கு வளர்ந்த தென்னைமரத்திற்கு ஆண்டுதோறும் ஒரு மரத்திற்கு ஒரு கிலோ வீதம் தென்னை நுண்ணூட்ட சத்து உரம் இட வேண்டும் அல்லது தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் தயாரிப்பான தென்னை ஊட்டச்சத்துகரைசல் (தென்னை டானிக்) மரம் ஒன்றுக்கு 200 மில்லி வீதம் 6 மாதத்திற்கு ஒரு முறை வேர்மூலம் செலுத்த வேண்டும். இவ்வாறு செய்தி குறிப்பில் கூறியுள்ளார்.

**மழைக்காலங்களில் சம்பா, தாளடி பயிரை தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்துவது எப்படி? வேளாண்மை உதவி இயக்குநர் விளக்கம்**

பட்டுக்கோட்டை: சம்பா, தாளடி நெற்பயிரை தாக்கும் பூச்சி நோய்களை கட்டுப்படுத்த வேளா ண்மை உதவி இயக்குநர் மதியரசன் ஆலோசனை தெரிவித்துள்ளார். பட்டுக்கோட்டை அடுத்த திருவோணம் வேளாண்மை உதவி இயக்குநர் மதியரசன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: விவசாயிகள் தற்போது சாகுபடி செய்துள்ள சம்பா - தாளடி நெற்பயிர் வளர்ச்சி பருவம், அதிக தூர் வெடிக்கும் பருவம், சூல் பிடிக்கும் பருவம், பூக்கும் பருவம் என பல்வேறு நிலைகளில் உள்ளது. தற்போது மழை பெய்யத் துவங்கியதால் பூச்சிகள் மற்றும் நோய்கள் தாக்க அதிகம்

வாய்ப்புள்ளது. இதனை தொடர் கண்காணிப்பில் வைத்திருக்க வேண்டும். தேவைப்பட்டால் 3 சத வேப்ப எண்ணைய் தெளிக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு தேவையான 6 லிட்டர் வேப்ப எண்ணெயுடன் 200 மிலி டீ பால் என்கிற ஒட்டுத்திரவம் சேர்த்து 200 மிலி தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும் அல்லது 5 சத வேப்பங்கொட்டை கரைசல் தெளி க்க வேண் டும். அதாவது ஒரு ஏக்கருக்கு தேவையான 10 கிலோ வேப்பங்கொட்டையை நன்கு இடித்து துகீளாக்கி அதனை 20 லிட்டர் தண்ணீரில் ஊற வைத்து பின்னர் அக்கரைசலுடன் தேவையான அளவு ஒட்டுதிரவம் சேர்த்து 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைதெளிப்பான் கொண்டு மாலை வேளையில் தெளி க்க வேண்டும். இதேபோல் குலை நோய் கண் வடிவ புள்ளிகளுடன் இலைபரப்பு, கணுக்களில் காணப் படும். இதனை கட்டுப்படுத்திட ஒரு ஏக்கருக்கு 1 கிலோ சூடோ மோனாஸ் புளோரோசன்ஸ் என்னும் நன்மை செய்யும் பாக்டீரியாவை 200 லிட்டர் தண் ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். இம்மாதிரியான சூழ லில் தழை உரம் இடு வதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும். இலை கருகல் நோய் இலையின் நுனி மற்றும் விளிம்பு பகுதியிலிருந்த ஆரம்பித்து பழுப்பு கலந்த மஞ்சள் நிறமாக கீழ்நோக்கி பரவி இலை காய்ந்து வரும். இந்நோயை கட்டுப்படுத்திட தழை உரம் இடுவதை தவிர்க்க வேண் டும். மேலும் 20 சத பசுஞ்சாண கரைசல் தெளிக்க வேண்டும். அதாவது 40 கிலோ புதிய பசுஞ்சாணத்தை 100 லிட்டர் தண் ணீரில் கரைத்து 12 மணி நேரம் ஊற வைத்து பிறகு தெளிந்த நீரை வடிகட்டி எடுத்து மேலும் அதனுடன் 100 லிட்டர் தண்ணீர் கலந்து 200 லிட்டராக்கி கைத்தெளிப்பான் கொண்டு மாலை வேளை யில் தெளிக்க வேண்டும் (அல்லது) ஸ்ட்ரெப்டோமைசின் சல்பேட்டுடன் டெட்ராசைக்கிளின் கலந்த மருந்துக் கலவை ஏக்கருக்கு 120 கிராமுடன் காப்பர் ஆக்ஸி குளோரைடு 500 கிராம் என்ற அளவில் 200 லிட்டர் நீருடன் கலந்து 15 நாட்கள் இடைவெளியில் இருமுறை தெதளிக்க வேண்டும் (அல்லது) ஒரு ஏக்கருக்கு சூடோ மோனாஸ் புளோரோசன்ஸ்

1 கிலோ நன்மை செய் யும் பாக்டீரியாவை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து வயலில் தெளிக்க வேண்டும். இவ்வாறு செய்திக் குறிப் பில் குறிப்பிட்டுள்ளார்.

## வறட்சியை தாங்கி வளரும் குதிரைவாலி பயிரிட ஆலோசனை

ராமநாதபுரம்: வறட்சியை தாங்கி வளரும் குதிரைவாலி சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு வேளாண் துறை ஆலோசனை வழங்கியுள்ளது. ராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த 3 வாரங்களாக வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது. விவசாயிகள் சாகுபடி பணியில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். மானாவாரி சாகுபடியாக சுமார் 90 ஆயிரம் ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மழைநீரை தேக்கி வைக்கும் வகையில் விவசாயிகள் நிலத்தில் ஆயிரக்கணக்கான பண்ணை குட்டைகளை வேளாண் துறை அமைத்துக்கொடுத்துள்ளது. இது விவசாயிகளுக்கு பயன்தரும் வகையில் உள்ளது. இது குறித்து வேளாண்மை உதவி இயக்குனர் (பொ) ராஜா தெரிவித்துள்ளதாவது: வேளாண்மை விரிவாக்க துணை இயக்க திட்டத்தின் கீழ் 2014-15ம் ஆண்டில் மாவட்டத்தில் பரவலாக நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு இந்த மழை நல்ல பலனை அளித்துள்ளது. நெல் சாகு படி பரப்பளவில் 10 சதவீதம் வறட் சியை தாங்கி வளரும் குதிரைவாலி சிறுதானிய பயிர் சாகுபடி செய்வது நல்ல பலனை தரும். இதனால் விவசாயிகளுக்கு கோ-2 ரக குதிரைவாலி விதைகள் வேளாண்மை விரிவாக்க திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது. இப்பயிர் சாகுபடி செய்வது தொடர் பான தொழில்நுட்பங்களை ராமநாத புரம் வட்டார வேளாண் மை விரிவாக்க துணை இயக்க தொழில்நுட்ப மேலாளர் மற்றும் தொழில்நுட்ப வல்லுனர்களை அணுகி பயன்பெறலாம் என தெரிவித்துள்ளார்.

**விதை கிராம திட்ட பயிற்சி**

அம்பை, :அம்பை வேளாண்மைத்துறை சார் பில் கோவில்குளம் கிராம விவசாயிகளுக்கு மூன்று கட்டமாக பயிற்சி வழங்கப்பட்டது. பயிற்சியின் 3ம் கட்டமாக விதை சுத்திகரிப்பு பற்றிய விளக்கங்கள் மற்றும் செயல் முறைகள் அம்பாசமுதத்திரம் வேளாண்மைத் துறை அலுவலகத்தில் உள்ள விதை சுத்திகரிப்பு நிலையத்தில் நடைபெற்றது. பயிற் சிக்கு நெல்லை வேளாண்மை துணை இயக்குனர் (மத்திய திட்டம்) பெருமாள் தலைமை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குனர் சுந்தரம் முன்னிலை வகித்தார். வேளாண்மை துணை இயக்குனர் அரசு சார்பில் விதை உற்பத்திக்கு அளிக்கப் படும் மானியங்கள் குறித்தும், விதை உற்பத்தி சார்ந்த தொழில்நுட்பங்கள் குறித்து வேளாண்மை உதவி இயக்குனர் சுந்தர மும், விதை சுத்திகரிப்புப் பணிகள் பற்றி விதைச்சான்று அலுவலர் ஆனந்தகுமார் விரிவாக எடுத்துக்கூறினார். வேளாண்மை அலுவலர் பரத்வாஜ் வரவேற்றார். வேளாண்மை துணை அலுவலர் தவசி ஆசாரி நன்றி கூறினார்.

இன்றைய வேளாண் செய்திகள்

**கன்னியாகுமரியில் 2 மணிநேரம் பலத்த மழை**

கன்னியாகுமரியில் நேற்று மாலை 5 மணி முதல் இரவு 7 மணி வரை 2 மணி நேரம் இடி–மின்னலுடன் பலத்த மழை பெய்தது. இதனால் கன்னியாகுமரி தெருக்களில் மழை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. பகவதி அம்மன் கோவிலின் வடக்கு நுழைவு வாசலில் முட்டளவுக்கு மழைநீர் தேங்கியது. இதனால் கோவிலுக்குள் பக்தர்கள் செல்ல சிரமம்

ஏற்பட்டது.

**<u>திருவாடானை தாலுகாவில் விவசாய பணிகள் தீவிரம்</u>**



திருவாடானை தாலுகாவில் நெல் விவசாய பணிகள் தீவிரமாக நடை பெற்று வருகிறது. நெல் விவசாயம் திருவாடானை தாலுகா அலுவலகத் தில் இந்த ஆண்டுக்கான நெற்பயிர் சாகு படி குறித்த பல்துறை அதிகாரிகள் மற்றும் அலுவலர்களின் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. ராமநாதபுரம் வேளாண்மை இணை இயக்குனர் கிருஷ் ணமூர்த்தி, கலெக்டரின் நேர்முக உத வியாளர் கனகராஜன், தாசில்தார் காமாட்சி, வேளாண்மை உதவி இயக்கு னர்கள் நாகராஜ், உலகு, தோட்டக்கலை உதவி இயக்குனர் இளங்கோவன் ஆகி யோர் கலந்து கொண்டு பயிர் சாகுபடி குறித்து ஆய்வு நடத்தினர். கூட்டத்தில் தாசில்தார் காமாட்சி, துணை தாசில் தார்கள் கணேசன், தமிழ்செல்வி, பூமி நாதன், வருவாய் ஆய்வாளர்கள் ரவி, சேதுபதி, தமிழரசன், விமலாஜாய், சரவ ணன், நம்பு காயத்ரி, சத்தியேந்திரன் மற் றும் பலர் கலந்து கொண்டனர். அதனை தொடர்ந்து தாசில்தார் காமாட்சி நிருபர்களிடம் கூறியதாவது:- திருவாடானை தாலுகாவில் புல்லூர் பிர்க்காவில் 5,368 எக்டேரிலும், தொண்டி பிர்க்காவில் 5,901 எக்டேரிலும், திருவா டானை பிர்க்காவில் 8,061 எக்டேரிலும், மங்களக்குடி பிர்க்காவில் 8,716 பிர்க்கா விலும், சோழந்தூர் பிர்க்காவில் 6,075 எக்டேரிலும், ஆனந்தூரில் 5,282 எக்டே ரிலும், ஆர்.எஸ்.மங்கலம் பிர்க்காவில் 6,235 எக்டேரிலும் என 17,455 எக்டேர் நஞ்சை நிலங்களிலும், 28,345 எக்டேர் புஞ்சை நிலப்பரப்பிலும்

நெற்பயிர் சாகு படி நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு நல்ல மழை பெய்துள் ளதை யொட்டி இந்த தாலுகாவில் இன்னும 5,000 முதல் 10,000 எக்டேர் வரை பயிர் சாகுபடி செய்ய வாய்ப்பு உள்ளது. தற்போது இந்த தாலுகாவில் நெற் பயிர் சாகுபடி நிலங்களில் விவசாய பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. கடந்த சில நாட்களாக பெய்த மழை யால் இந்த தாலுகாவில் 27 வீடுகள் இடிந்து சேதமடைந்துள்ளது. பாதிக்கப் பட்டவர்களுக்கு முதல்-அமைச்சரின் நிவாரண நிதியின் மூலம் உதவி தொகை வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் கூறினார். உணவு பாதுகாப்பு இயக்கம் திருவாடானை வேளாண்மை உதவி இயக்குனர்கள் நாகராஜ், உலகு ஆகி யோர் கூறும்போது, திருவாடானை தாலுகாவில் விவசாயிகளுக்கு தேவை யான களைக்கொல்லி மருந்துகள், நுண் ணூட்ட சத்து, பயிர் பாதுகாப்பு கருவி கள் மற்றும் தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் சார்பில் மானிய விலை யில் பயிர் பாதுகாப்பு மருந்துகள் திருவாடானை, ஆர்.எஸ்.மங்கலம் வேளாண்மை அலுவலகங்களில் போதிய அளவு இருப்பு உள்ளது என்று தெரிவித்தனர்.

## <u>வட்டார அளவில் பறக்கும் படை அமைத்து உரங்கள், பூச்சி மருந்துகள் இருப்பு குறித்து கண்காணிக்க வேண்டும் அதிகாரிகளுக்கு மாவட்ட கலெக்டர் ராஜாராமன் உத்தரவு</u>

வட்டார அளவில் பறக்கும் படை அமைத்து, விவசாயிகளுக்கு தேவையான அளவு உரங்கள், பூச்சி மருந்துகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து கண்காணிக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு மாவட்ட கலெக்டர் ராஜாராமன் உத்தவிட்டுள்ளார்.

ஆய்வுக்கூட்டம்

சிவகங்கை கலெக்டர் அலுவலகத்தில் வேளாண்மைத் துறை தொடர்பான ஆய்வுக்கூட்டம் மாவட்ட கலெக்டர் ராஜாராமன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் ராஜாராமன் கலெக்டர் ராஜாராமன் பேசியதாவது:-

சிவகங்கை மாவட்டத்தில் தற்போது பருவ மழை பெய்து விவசாயப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதையொட்டி இப்பருவத்திற்கு தேவையான யூரியா, டி.ஏ.பி, பொட்டாஷ், காம்ப்ளக்ஸ் ஆகிய உரங்கள் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தனியார் உரக்கடைகளில் விவசாயிகளின் தேவைக்கேற்ப இருப்பு வைக்க வேண்டும். மேலும் அரசின் நிர்ணய விலைக்கு உரங்கள் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும். பறக்கும் படை மேலும் வட்டார அளவில் பறக்கும் படை அமைத்து உரங்கள், பூச்சி மருந்துகள் ஆகியவை தேவையான அளவு இருப்பு உள்ளதா என்றும், அவை விவசாயிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட உரிய விலையில் கொடுக்கப்படுகிறதா என்பதையும் அதிகாரிகள் கண்காணிக்கக வேண்டும். மேலும் ஒவ்வொரு வட்டார அளவிலும் வேளாண்மை உதவி இயக்குநர்களை இதற்கு கண்காணிப்பு அலுவலர்களாக நியமித்து விவசாயிகளுக்கு ஏற்படும் குறைகள் மற்றும் புகார்களை தெரிவிக்கும் வகையில் செயல்பட வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். கூட்டத்தில் வேணாண்மை இணை இயக்குநர் (பொறுப்பு) கணேசன், தரக்கட்டுப் பாடு உதவி இயக்குநர் கதிரேசன் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## <u>பொதுப்பணித்துறை அதிகாரிகளை விவசாயிகள் அணுக வேண்டும் கலெக்டர் வேண்டுகோள்</u>

பெரியகுளம், கண்மாய் மதகுகளை திறப்பது சம்பந்தமாக விவசாயிகள் பொதுப்பணித்துறை அதிகாரிகளை அணுக வேண்டும் என்று மாவட்ட கலெக்டர் கே.எஸ்.பழனிசாமி தெரிவித்துள்ளார். கலெக்டர் ஆய்வு தேனி மாவட்டம், பெரியகுளம் அருகே உள்ள சோத்துப்பாறை அணையின் மொத்த கொள்ளளவான 126.28 அடியும் நிரம்பி தண்ணீர் வழிகிறது. தற்போது அணைக்கு 180 கனஅடி தண்ணீர் வருகிறது. அந்த தண்ணீர் அப்படியே வெளியேற்றப்படுகிறது. அணையில் இருந்து வெளியேறும்

நீர் தாமரைக்குளம், பெரியகுளம், பாப்பியன்பட்டி கண்மாய்களுக்கு செல்கிறது. தற்போது இந்த கண்மாய்கள் 80 சதவீத அளவில் நிரம்பியுள்ளது. இந்த சோத்துப்பாறை அணையினை மாவட்ட கலெக்டர் கே.எஸ்.பழனிசாமி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மதகுகள் திறப்பு அப்போது அவர் கூறுகையில், 'பெரியகுளம் பகுதியில் உள்ள கண்மாய்கள் இப்பகுதியில் பெய்த மழையின் காரணமாக நிரம்பி வருகின்றன. பெரும்பாலான கண்மாய்கள் 80 சதவீதம் நிரம்பி உள்ளது. கண்மாய் மதகுகளை திறக்கவும், அடைக்கவும் விவசாயிகள் பொதுப்பணித்துறை அதிகாரிகளை அணுக வேண்டும். பொதுப்பணித்துறை பணியாளர்கள் சுழற்சி முறையில் பணிபுரிந்து வருகின்றனர். மழைச் சேதங்களை கண்காணிக்க பொதுப்பணித் துறையினருடன் வருவாய்த் துறையினர் இணைந்து செயல்படுகின்றனர். போதிய அளவு தண்ணீர் இருப்பதால் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாது' என்றனர். ஆய்வின் போது ஆர்.டி.ஓ. ஜானகி, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் சேகர், உதவி செயற்பொறியாளர் பாண்டியன், தென்கரை வருவாய் ஆய்வாளர் சிவக்குமார் ஆகியோர் உடன் இருந்தனர்.